65565

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 03

**EPU3331 – கற்றல் கற்பித்தலில் முன்னோக்கு**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

---

திகதி:- **24.05.2025** நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

---

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. முன்பள்ளி அல்லது ஆரம்பக்கல்வி அமைப்பில் “பிள்ளை மையக் கல்வி” என்பதன் அர்த்தம் என்ன?
2. பிள்ளை மையக் கல்வி குறித்து ரூசோ அறிமுகப்படுத்திய ஐந்து (05) தத்துவார்த்தக் கருத்துக்களைப் பட்டியலிடுக.
3. “செயற்பாட்டு அடிப்படை கற்றல் என்பது ஆரம்ப வகுப்பறையில் மிகவும் பயனுள்ள கற்றல் முறைகளில் ஒன்றாகும்”

   மேற்கண்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் பதிலுக்கான காரணங்கள் ஐந்தினை (05) நியாயப்படுத்துக.
4. இலங்கை கல்வி முறையில் ஏழு (07) தேர்ச்சிகளை கூறி, அவற்றில் ஒன்றைச் (01) சுருக்கமாக விளக்குக.
5. இலங்கையில் 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தத்தின் ஐந்து (05) நோக்கங்களை பட்டியலிடுக.
6. “அனைவருக்கும் கல்வி” என்பதன் அர்த்தம் என்ன?
7. மரியா மாண்டிசோரி முறையின் மூன்று (03) கொள்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.
8. குடும்பம் என்ற கருத்தைப் பொருத்தமான வரையறையுடன் விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** விரி குடும்பம் மற்றும் தனிக்குடும்பங்களின் அடிப்படை அம்சங்களை விவரிக்குக.

   (06 புள்ளிகள்)

   **ii.** இலங்கையின் பாரம்பரிய அமைப்பை மாற்றுவதற்கு சமூக-பொருளாதார காரணிகள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை விளக்குக.

   (07 புள்ளிகள்)

   **iii.** “இலங்கை சமூகத்தில் தனிக்குடும்பங்களின் பெற்றோர் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.”

   மேற்கண்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் பதிலை நான்கு (04) காரணங்களுடன் நியாயப்படுத்துக.

   (07 புள்ளிகள்)



15

10. **i.** இலங்கையில் முன்பள்ளிக் கல்வி தொடர்பான ஐந்து (05) பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

**ii.** உங்கள் புரிதலின்படி, இலங்கையில் அப்பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு நீங்கள் என்ன வகையான தீர்வை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்கள்?

(07 புள்ளிகள்)

**iii.** இலங்கையில் முன்பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்த தற்போதைய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய புதிய உத்திகளைப் பற்றி கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

11. 1999 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களை பின்வரும் கருப்பொருள்களுக்கு ஏற்ப விபரிக்குக.

**i.** கலைத்திட்டம் (06 புள்ளிகள்)

**ii.** கற்பித்தல் கற்றல் முறைகள் (06 புள்ளிகள்)

**iii.** பிள்ளைக் கணிப்பீடு (08 புள்ளிகள்)

12. **i.** இலங்கையில் ஆரம்பக் கல்வியின் **மூன்று** (03) முக்கிய நிலைகளைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

**ii.** ஒவ்வொரு நிலையிலும் உள்ள குறிப்பிட்ட மாற்றங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(09 புள்ளிகள்)

**iii.** உங்கள் புரிதலின்படி, மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய நிலைகளை அறிமுகப்படுத்திய பிறகு இலங்கை ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் வினைதிறனாக செயல்படுகிறார்களா? உமது பதிலை **நான்கு (04)** காரணிகளுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டு (02)** பற்றி சிறுகுறிப்புக்களை எழுதுக.

**i.** ஆரம்பப்பிரிவு வகுப்பறையில் விசேட தேவையுடைய பிள்ளைகள்

**ii.** இலங்கையில் பகல் பராமரிப்பு மையங்களின் முக்கிய தரநிலைகள்

**iii.** பிள்ளைகளின் சமூக-மனவெழுச்சி விருத்தி

**iv.** பிள்ளைகளின் உடலியல் ரீதியான விருத்தி

(10x2=20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -